கினால் அந்தப் பகுதிகள் செழிப்படையும் என்பதோடு அந்தப் பகுதி மக்கள் மனதில் ஒரு எழுச்சியும் ஏற்படும் என்பதால் அமைச்சர் அவர்கள் இதில் நேரடி கவனம் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர், எம், வீரப்பன் : நான் நேரடி கவனம் செலுத்தும் முறையில் அந்தப் பகுதியை சென்ற ஆண்டு நேரில் சென்று பார்வையிட்டேன். அங்கு கோவிலாறு, பெரியாறு என்ற இரண்டு அணைத்தேக்கங்கள் இருக்கின்றன. அதையொட்டி அந்தப் பகுதியை நல்லமுறையில் மக்கள் வந்து விடுமுறைக் காலங்களில் பொழுதுபோக்கிச் செல்லவும் கண்டு மகிழ்ந்து? செல்லவும் அவ்வகையில் ஏற்பாடுகள் செய்ய இயலும் என்று தெரிவித்து அது சம்பந்தமாக பொதுப்பணித்துறை மற்றும் இரிகேஷன் துறையும் சேர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று சுற்றுலாத்துறை கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர் பயிற்சியில் புதிய முறை

*வினா எண், 202—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர் பயிற்சியில் இதுவரை கையாளப்பட்டு வந்த முறையை கைவிட்டு புது முறையை கையாள அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)&(ஆ) : 1977—1978—முதல் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கான திருந்திய பாடத்திட்டம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அமுலுக்கு வந்துள்ளது, அதனை மாற்றும் உத்தேசம் எதுவும் இல்லை.

திரு, என். கிட்டப்பா : ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் இருந்த அளவுக்கு இல்லாமல் பெரும்பாலும் மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சில பயிற்சிப் பள்ளிகளே இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள்—மாணவர்கள் முறை ஒழுங்குபடுத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கும் வேலை கிடைக்கும் என்ற நிலை இருப்பதால், இந்த முறையை பின்பற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதுடன், புதிதாக ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளை திறக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் ஆசிரியர்களின் தேவைகள் கருதியும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் பெரும்பான்மையாக வேலையில்லாதிருக்கும் நிலையை தவிர்க்கும் பொருட்டும் ஆசிரியப் பயிற்சி பள்ளிகளில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. இக்காரணத்தால் 1972—1973&1974—1975—ல் மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பள்ளியில் சேர்க்கப்படவில்லை. இரண்டாம் ஆண்டு வகுப்பு மட்டுமே அப்போது நடந்தது. மாணவர்களைச் சேர்த்தலில் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. 1972—1973-க்கு முன்பு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். ஆனால் மேற்கண்ட ஆணையின்படி ஒரு வகுப்புக்கு 30 மாணவர்களும், ஒவ்வொரு ஆசிரியப் பயிற்சி பள்ளியிலும் ஒரே ஒரு வகுப்பு மட்டுமே இருக்க வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஆசிரியப்பயிற்சிப் பள்ளியில் எண்ணிக்கை குறைக்கப்பட்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 2 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் (ஒன்று ஆண்களுக்கும், ஒன்று பெண்களுக்கும்) நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 30—லிருந்து 25 ஆக மீண்டும் குறைக்கப்பட்டது. இருந்தபோதிலும் 10 மாணவர்கள் அதிகமாக தகுந்த காரணங்களுக்காக தகுதியுடையவர்களை சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் மாணவர்களையும் மனதில் வைத்துத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இவ்விதம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, எட்டாவது வரை படித்துவிட்டு இடைநிலை ஆசிரியர்களாக 25 ஆண்டுகளாக 30 ஆண்டுகளாக எந்தவிதமான உயர்வும் பெறாமல், இடைநிலை ஆசிரியர் என்ற நிலையிலேயே ஓய்வு பெற வேண்டிய நிலையில் தான் இப்போது இருந்து வருகிறார்கள். ஆனால் அண்டை மாநிலங்களில் இப்படிப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு குறுகிய கால பயிற்சி கொடுத்து முதல்நிலை உயர்வு கொடுத்து வருகிறார்கள். அதுபோன்ற ஒரு கோரிக்கை இடைநிலை ஆசிரியர்களிடமிருந்து தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலித்து அவர்களுக்கு நல்லதொரு முடிவை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களில் தகுதி பெற்றவர்களுக்கு முதல்நிலை தகுதி அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

[1979 மார்ச் 3

திரு. க. சுப்பு: ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களுக்கு இடம் கிடைக்காமல் மிகவும் திண்டாடுகிறார்கள். செகண்டரி கிரேட் டீச்சர்ஸ்-க்கு என்ன பயிற்சி கொடுக்கப்படுகிறதோ அதே பயிற்சித்தான் இவர்களுக்கும் அளிக்கப்படுகிறது, ரொம்ப வித்தியாசம் இல்லை, சிறிய வித்தியாசங்கள் இருக்கலாம். ஆகவே செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும்போதே தமிழ் ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்தால், நிறையப் பேர்களுக்கு இடம் கிடைக்கும், இதன் மூலம் இடம் கிடைக்கவில்லை என்ற பிரச்னையையும் தீர்க்கலாம். ஆகவே இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு தரப்படும் பயிற்சி போலவே புலவர் தகுதியுள்ள தமிழ் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி; தலைவர் அவர்களே, தமிழ் புலவர் பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு இரண்டு முறை மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் புலவர் பட்டம் பெற்ற பெண் ஆசிரியர்களுக்கு இடம் கிடைப்பதில் மிக கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக இந்த பயிற்சிகளில் புலவர் பட்டம் பெற்ற பெண் தமிழ் ஆசிரியர்களுக்கு இடம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பெண்களுக்கு தரப்படுகின்ற பயிற்சியில் பெண்களுக்கு இடம் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது என்று சொல்வதன் மூலம் இந்தப் பயிற்சியில் ஆண்களை மட்டும் தான் சேர்த்துக் கொள்ளப்படுவது போன்ற கருத்து தொனிக்கிறது. பெண்களுக்கான பயிற்சியில் பெண்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்களது ஓய்வூதியம்.

* வினா எண். 203—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1-10-1970-க்குமுன் ஓய்வுபெற்ற ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) மற்ற சலுகைகள் என்ன?